

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் கோவில் புறையூர்ஊராட்சியில் நடைபெற்ற ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், நிர்வாகிகள் சரவணன், எஸ். பி. சம்பத், ரவிச்சந்திரன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மணிகண்டன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக **என்.எஸ்.மாதேஷ்வரன்**, (ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் **தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018.
நாள்: 14.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்களின் ஆலோசனைப்படி விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கையை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி துவக்கி வைத்தார். ஒன்றிய செயலாளர்கள் மு.தங்கம், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், அ.சா.ஏ.பிரபு, நகர செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### மயிலாடுதுறை மாவட்டத்திற்கு முதல்வர் வருகை!

# கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.வேண்டுகோள்!

மயிலாடுதுறை, ஜூலை 15 -

மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15.7.2025) மதியம் சிதம்பரத்தி லிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தர



உள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழகம் சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அதைத் தொடர்ந்து. கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் கொள்ளிடம் புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலையை திறந்து வைத்து கழக கொடி ஏற்றி வைக்கிறார். அதைத் தொடர்ந்து திருவெண்காடு சென்று அங்கிருந்து மாலை சீர்காழி கிழக்கு ஒன்றியம் செபதனிருப்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து கருவி, கீழையூர், வழியாக மயிலாடுதுறை செல்லும் கழகத் தலைவர் அவர்கள் மணக்குடி அருகே பாலாஜி நகரிலிருந்து பொது மக்களை சந்திக்கும் வகையில் சுமார் 4 கிலோ மீட்டர் நடந்து (ரோட் ஷோ ) கால் டாக்ஸி, மணிக்கூண்டு, சின்ன கடை தெரு, வழியாக கச்சேரி சாலையில் வட்டார வளர்ச்சி அலுவலகம் வழியாக அண்ணா பகுத்தறிவு மன்றம் செல்லும் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து 16ஆம் தேதி காலை குத்தாலம் கிழக்கு ஒன்றியம் வழுவூரில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைக்கிறார். பின்னர் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் நடைபெற உள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிகள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், கிளைக் கழக வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

## புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாநகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை மாநகரம், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய இரண்டு மாநகரக் கழகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநகரக் கழகங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

**புதுக்கோட்டை வடக்கு மாநகரம்** : 2, 3, 8, 9, 11, 12, 14, 16, 17, 25, 26, 27, 28, 29, 30, 32, 33, 35, 36, 40, 42 ஆகிய 21 வார்டுகள்.

**புதுக்கோட்டை தெற்கு மாநகரம்** : 1, 4, 5, 6, 7, 10, 13, 15, 18, 19, 20, 21, 22, 23, 24, 31, 34, 37, 38, 39, 41 ஆகிய 21 வார்டுகள்.

**மாநகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு** ஆகிய மாநகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, மாநகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**புதுக்கோட்டை வடக்கு மாநகரம்**

பொறுப்பாளர் : **எம். லியாகத் அலி**
புதுக்கோட்டை

**புதுக்கோட்டை தெற்கு மாநகரம்**

பொறுப்பாளர் : **வே. ராஜேஷ்**
புதுக்கோட்டை

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 14.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### 100 நாள் வேலை

# வில்லியனூர் பி.டி.ஓ. அலுவலகத்தை பெண்கள் முற்றுகை!

### அதிகாரிகளுடன் புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேச்சுவார்த்தை!

புதுச்சேரி, ஜூலை. 15-

வில்லியனூர் சட்டமன்ற தொகுதியில் ஒன்றிய அரசின் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை கொடுக்காமல் வெறும் 8 நாட்கள் மட்டுமே வழங்கப்படுவதால் அத்திட்டத்தில் பதிந்துள்ள ஆயிரக்கணக்கான ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

இந்த நிலையில் வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட உத்திரவாகினிப்பேட், பெரியப்பேட், கரையான்பேட், புதுப்பேட், சுப்ரமணிய சிவா நகர் பகுதியில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்கள் 100க்கும் மேற்பட்டோர் தங்கள் பகுதியில் 100 நாள் வேலை திட்டம் முழுமையாக புறக்கணிக்கப்படுவதாக கூறி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவாவிடம் இன்று காலை புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விசாரிக்க தொடர்பு கொண்டபோது அலுவலகத்தில் அதிகாரிகள் யாரும் இல்லாததால் வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் பெண்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் அறையையும் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதுனால் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

பின்னர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் திட்ட அதிகாரி தயானந் டெண்டுல்கர் மற்றும் இணை இயக்குநர் கலைமதி ஆகியோர் எதிர்க்கட்சித் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போது, வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகள் அனைத்தும் வில்லியனூர் சட்டமன்ற தொகுதி திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் தொகுதி என்பதால் அதிகாரிகள் மெத்தனம் காட்டுகிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. ஒன்றிய அரசும், மாநில அரசும் 100 நாள் வேலையை முழுமையாக கொடுப்பதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அது இல்லை என்பதை எங்களால் ஆதாரத்துடன் கூற முடியும். குறிப்பாக வில்லியனூர் தொகுதியில் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் ஒன்றிய அரசின் 100 நாள் வேலை திட்டத்தில் ஆண்டுக்கு 8 நாட்கள் கூட வேலை வழங்கப்படாத அவலம் தொடர்கிறது. இதுகுறித்து சட்டமன்றத்திலும், துறையிலும் பலமுறை புகார் தெரிவித்தும் அதிகாரிகள் உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து ஒன்றிய அரசுக்கு அனுப்ப தவறிவிட்டனர். இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், இத்துறை மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகள் மற்றும் கழிப்பிடம் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களில் வழங்கப்பட்ட கடனுதவியில் மிகப்பெரிய ஊழல் நடந்துள்ளது. குறிப்பிட்ட பகுதி மக்கள் மட்டுமே பயன்பெறும் வகையில் இவ்வலுவலகத்தில் சிஸ்டம் செயல்பகிறது. இங்குள்ள அதிகாரிகள், கடன் பெறுபவர்கள், வங்கி அதிகாரிகளின் கூட்டு சதியே இதற்கு காரணமாக உள்ளது. துறை மூலம் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்ட டிராக்டர் உள்ளிட்ட உழவுப் பொருட்கள் அனைத்தும் கொடுத்தவர்களிடம் உள்ளதா அல்லது வெளியில் விற்கப்பட்டுள்ளதா என்பது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

கழிப்படம் கட்டுவதில் நடைபெற்ற மிகப்பெரிய ஊழல் வழக்கில் பாதிக்கப்பட்டு கழிவறை கட்டாமல் உள்ளவர்களுக்கு இன்னும் கடனுதவி அளிக்காமல் உள்ளதை கவனத்தில் கொண்டு உடனடியாக கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வில்லியனூர் தொகுதியில் 100 நாள் வேலை திட்டம் குறைந்தது 20 நாட்களாவது வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த திட்ட அதிகாரி புகார் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவும், வில்லியனூர் தொகுதியில் நாளை முதல் 100 நாள் வேலை பணி தொடரவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். இதனை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களிடம் எதிர்க்கட்சித் பேசி போராட்டத்தை கைவிட வைத்தார். இதனால் வில்லியனூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் 2 மணிநேரம் பரபரப்பு ஏற்பட்டது.



புதுச்சேரி – வில்லியனூர் பகுதியில் முறையாக 100 நாள் வேலை திட்டப் பணிகள் வழங்காததைக் கண்டித்து, பி.டி.ஓ. அலுவலகத்தில் மகளிர் போராட்டம் நடத்தினர். பின்னர் புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து போராட்டம் விலக்கி கொள்ளப்பட்டது.


